கரூரில் 48 நெசவாளர்களுக்கு ரூ.34 லட்சத்தில் நலத்திட்ட உதவி

கரூர், ஆக. 8–

12வது தேசிய கைத்தறி தினத்தை முன்னிட்டு, கரூர் வெங்கமேட்டில் நடைபெற்ற விழாவில் 48 நெசவாளர்களுக்கு ரூ.33.76 லட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை கலெக்டர் முத்துக்குமரன் வழங்கினார். செங்குந்தர் கைக்கோளர் முதலியார் மண்டபத்தில் கைத்தறித் துறை சார்பில் நடைபெற்ற விழாவில் கலெக்டர் பேசியதாவது:–

சுதேசி இயக்கத்தை நினைவுகூரும் வகையில் ஆண்டுதோறும் ஆகஸ்ட் 7ம் தேதி தேசிய கைத்தறி தினம் கொண்டாடப்படுகிறது. ஜவுளி மற்றும் இல்ல உபயோகத் துணி உற்பத்தியில் உலகளவில் தனித்த அடையாளம் பெற்ற கரூரின் பெருமைக்கு நெசவாளர்களின் உழைப்பே அடித்தளமாக உள்ளது.

இளைஞர்களும் கைத்தறிப் பொருட்களை அதிகம் பயன்படுத்த வேண்டும். கைத்தறி ஆடைகளை அணிவது என்பது ஒரு உடைத் தேர்வு மட்டுமல்ல; நமது பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் சமூகப் பொறுப்பும் ஆகும். "கைத்தறி அணிவோம்; நெசவாளரை வாழவைத்திடுவோம்" என்ற எண்ணத்துடன் அனைவரும் கைத்தறிப் பொருட்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

விழாவையொட்டி நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாமில் 500க்கும் மேற்பட்ட நெசவாளர்களுக்கு ரத்த அழுத்தம், கண், காசநோய், நுரையீரல் மற்றும் சர்க்கரை நோய் உள்ளிட்ட பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. தொடர்ந்து, முத்ரா திட்டத்தின் கீழ் 25 பேருக்கு ரூ.17.50 லட்சம் மதிப்பிலான கடனுதவியும், சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 23 பயனாளிகளுக்கு ரூ.16.26 லட்சம் மதிப்பிலான அனுமதி ஆணைகளும் வழங்கப்பட்டன. மொத்தம் 48 நெசவாளர்களுக்கு ரூ.33.76 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. விழாவில் கைத்தறித் துறை உதவி இயக்குநர் ஜெ. சுகன்யா, நெசவாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

ஈரோடு ஊராட்சி ஒன்றியத்தில் திட்டப்பணிகளை விரைந்து முடிக்க கலெக்டர் கந்தசாமி அறிவுறுத்தல்

ஈரோடு, ஆக. 8–

ஈரோடு மாவட்டம் ஈரோடு ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட வேப்பம்பாளையம், பிச்சாண்டாம்பாளையம், கதிரம்பட்டி, புத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை கலெக்டர் கந்தசாமி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

வேப்பம்பாளையம் நியாயவிலைக் கடையில் பொது விநியோகப் பொருட்களின் இருப்பு, விற்பனை, குடும்ப அட்டைதாரர்களின் எண்ணிக்கை, அத்தியாவசியப் பொருட்கள் வழங்கும் முறை, பதிவேடுகள் ஆகியவற்றை ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையத்தில் குழந்தைகளின் வருகைப் பதிவு, உயரம், எடை, ஊட்டச்சத்து உணவு வழங்கல், கற்றல் செயல்பாடுகள் உள்ளிட்டவற்றை பார்வையிட்டார். அங்கு குழந்தைகளுக்கு இனிப்புகள் வழங்கினார்.

வேப்பம்பாளையம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் மாணவர்களின் வருகை, கற்றல் திறன், வாசிப்புத் திறன் ஆகியவற்றை ஆய்வு செய்ததுடன், பள்ளி சமையலறையைப் பார்வையிட்டு மாணவர்களுக்கு வழங்கப்பட்ட சத்துணவை சுவைத்துப் பார்த்து அதன் தரம் குறித்து கேட்டறிந்தார்.

பின்னர், வி.பி.ஜி. ராம்ஜி திட்டத்தின் கீழ் ரூ.14.96 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள நாற்றங்கால் பண்ணையைப் பார்வையிட்டு, நாற்றுகளின் பராமரிப்பு, வளர்ச்சி மற்றும் நீர்ப்பாசன மேலாண்மை குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

பிச்சாண்டம்பாளையம் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் பதிவேடுகள், பணியாளர்களின் வருகைப் பதிவு மற்றும் அரசுத் திட்டங்கள் செயல்படுத்தப்படும் விதம் குறித்து ஆய்வு செய்தார்.

புத்தூர் புதுப்பாளையம் பகுதியில் மானியக் கடனுதவி பெற்று காய்கறி சாகுபடி மேற்கொண்டு வரும் விவசாயியின் தோட்டத்தைப் பார்வையிட்டு, சாகுபடி பரப்பு, விளைச்சல் மற்றும் வருவாய் குறித்து கேட்டறிந்தார்.

கதிரம்பட்டி நஞ்சனாபுரம் பகுதியில் மகளிர் சுயஉதவிக் குழுவினர் நடத்தி வரும் சிப்பிக்காளான் வளர்ப்பு மையத்தையும் பார்வையிட்டு, உற்பத்தி, பராமரிப்பு மற்றும் விற்பனை குறித்து குழு உறுப்பினர்களிடம் விவரங்களை கேட்டறிந்தார்.

மேலும், பிச்சாண்டம்பாளையத்தில் செயல்படும் இயற்கை உரம் தயாரிப்பு மையத்தில் உற்பத்தி நடைமுறைகள் மற்றும் பயன்பாடுகள் குறித்து அதிகாரிகளிடம் விளக்கம் பெற்றார்.

ஆய்வின் முடிவில், அனைத்து வளர்ச்சித் திட்டப் பணிகளையும் காலக்கெடுவுக்குள் விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டுக்கு கொண்டுவர அதிகாரிகளுக்கு கலெக்டர் கந்தசாமி அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது வட்டாட்சியர் கவிதா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தங்கமணி, லதா, செயற்பொறியாளர்கள் ராகுல், சிவகுமார் உள்ளிட்ட பல்வேறு துறை அதிகாரிகள் உடனிருந்தனர்.

பள்ளிகளில் காலை உணவுத் திட்டம்: கோவை மாநகராட்சி 2 மாதங்களில் 21,242 மாணவர்கள் பயன்பெற்றனர்

கோவை, ஆக. 8–

கோவை மாநகராட்சிக்கு உட்பட்ட பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் காலை உணவுத் திட்டத்தின் மூலம் கடந்த இரண்டு மாதங்களில் 21,242 மாணவ, மாணவிகள் பயனடைந்துள்ளனர்.

மாநகராட்சி பள்ளிகளில் 1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் பசியின்றி கல்வி கற்கவும், பெற்றோரின் சுமையை குறைக்கவும் காலை உணவு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன்படி, திங்கள்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை பொங்கல், ரவா கிச்சடி, வெண்பொங்கல், கோதுமை ரவா உப்புமா, பருப்பு சாதம், காய்கறி சாம்பார் உள்ளிட்ட சத்தான உணவுகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

கோவை மாநகராட்சிக்கு உட்பட்ட 83 ஆரம்பப் பள்ளிகள், 37 நடுநிலைப் பள்ளிகள், 46 அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் ஒரு சிறப்புப் பள்ளி என மொத்தம் 167 பள்ளிகளில் பயிலும் 21,242 மாணவ, மாணவியர்கள் இந்தத் திட்டத்தின் மூலம் பயன்பெற்று வருகின்றனர்.

தமிழக முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதியின் 8வது நினைவு தினத்தை முன்னிட்டு மேட்டுப்பாளையம் பேருந்து நிலையத்தில் ஜென்ஸி திமுக ஒருங்கிணைப்பாளர் ஆதவன் சதீஸ்குமார் தலைமையில் கலைஞர் கருணாநிதியின் உருவபடத்திற்கு மாவட்ட செயலாளர் தொண்டமுத்தூர் ரவி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அருண்குமார், வடக்கு நகர செயலாளர் அஷ்ரப்அலி, தெற்கு நகர செயலாளர் முனுசாமி, வழக்கறிஞர் தினேஷ் ஆகியோர் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

தேசிய கைத்தறி நாள் விழா

சிறந்த நெசவாளர்களுக்கு விருது: முதலமைச்சர் விஜய் வழங்கினார்

சென்னை, ஆக.8–

தேசிய கைத்தறி நாள் விழாவையொட்டி, முதலமைச்சர் விஜய் சிறந்த நெசவாளர்களுக்கு விருதுகளை வழங்கியதுடன், 7 நாட்கள் நடைபெறுகின்ற கைத்தறி கண்காட்சியையும் தொடங்கி வைத்தார்.

1905ம் ஆண்டு ஆகஸ்டு 7ந்தேதி தொடங்கப்பட்ட சுதேசி இயக்கத்தை நினைவுகூரும் வகையில், ஆண்டுதோறும் ஆகஸ்டு 7ந்தேதி தேசிய கைத்தறி நாளாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அதன்படி கைத்தறி நெசவாளர்களின் கலாசார, சமூக மற்றும் பொருளாதார பங்களிப்பைப் போற்றும் வகையில், தமிழ்நாடு கைத்தறி துறை சார்பில் 12வது தேசிய கைத்தறி நாள் விழா சென்னை கலைவாணர் அரங்கத்தில் நேற்று நடைபெற்றது.

விழாவிற்கு முதலமைச்சர் விஜய் தலைமை தாங்கினார்.

இந்த விழாவில், சிறந்த கைவினைத்திறன் மற்றும் தமிழ் நாட்டின் கைத்தறி மரபைப் பாதுகாப்பதில் சிறந்து விளங்கிய பட்டு, பருத்தி ரக நெசவாளர்கள் மற்றும் சிறந்த வடிவமைப்பாளர்கள் என 11 விருதாளர்களுக்கு மொத்தம் ரூ.22 லட்சத்து 25 ஆயிரத்துக்கான காசோலைகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை முதலமைச்சர் விஜய் வழங்கினார்.

தமிழ்நாட்டு நெசவாளர்களின் தயாரிப்புகளைச் சந்தைப்படுத்தும் நோக்கில் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் 'வெற்றித் தறி'



விற்பனையகம் மற்றும் மின்வணிகத் தளத்தையும் அவர் தொடங்கி வைத்தார்.

மேலும், வருகிற 13ந்தேதி வரை 7 நாட்கள் நடைபெறும் கைத்தறி கண்காட்சியையும் அவர் தொடங்கி வைத்தார்.

இக்கண்காட்சியில் தமிழ்நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் உற்பத்திசெய்யும் உலகப் புகழ்பெற்ற காஞ்சிபுரம், ஆரணி மற்றும் திருபுவனம் பட்டுச் சேலைகள், கோவை கோரா பருத்திச் சேலைகள், நெகமம் பருத்திச் சேலைகள், சேலம் வெண்பட்டு வேட்டிகள், வீட்டு உபயோக ஜவுளி வகைகள் உள்ளிட்ட பல்வேறு கைத்தறித் தயாரிப்புகளுடன், பிற மாநிலங்களின் தந்துஜா, மிருக்ணாயினி, குஜ்ஜாரி, பயோனிகா போன்ற புகழ்பெற்ற கைத்தறித் தயாரிப்புகளும் விற்பனைக்காகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இந்தக் கண் காட்சி தினசரி காலை 10 மணி முதல் இரவு 9 மணி வரை பொதுமக்களின் பார்வைக்குத் திறந்திருக்கும்.

இவ்விழாவில், சென்னையிலுள்ள தேசிய ஆடை வடிவமைப்பு நிறுவனத்தின் உதவியுடன் அமைக்கப்பட்டுள்ள கருப்பொருள் காட்சி அரங்கில், மாநில அளவில் விருதுபெற்ற நெசவாளர்கள் மற்றும் வடிவமைப்பாளர்கள் உருவாக்கிய கைத்தறித் தயாரிப்புகள் மற்றும் புவிசார் குறியீடு பெற்ற தமிழ்நாட்டின் காஞ்சிபுரம் பட்டுச் சேலைகள், பவானி ஜமக்காளம், மதுரை சுங்குடி சேலைகள், சேலம் வெண்பட்டு வேட்டிகள், கோவை கோரா காட்டன் சேலைகள், ஆரணி பட்டுச் சேலைகள், திருபுவனம் பட்டு சேலைகள், காரைக்குடி கண்டாங்கிச் சேலைகள், நெகமம் பருத்திச் சேலைகள், விரவநல்லூர் செடிபுட்டா சேலைகள், உறையூர் பருத்திச் சேலைகள் ஆகிய 11 கைத்தறி இரகங்கள் அழகுற காட்சிப்படுத்தப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் விஜய் பாலாஜி மற்றும் வெங்கடரமணன், ஜெக தீஸ்வரி, ரமேஷ், மதன் ராஜா, ஸ்ரீநாத் உள்ளிட்ட அமைச்சர்கள், தலைமைச் செயலாளர் சாய்குமார் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

மதுவால் ஏற்படும் பாதிப்பை தடுக்க சுற்றுச்சூழல் சமூக நல வரி விதிக்கும் சட்டம்: சட்டசபையில் மசோதா அறிமுகம்

சென்னை, ஆக.8

மதுவினால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பை தடுப்பதற்கு ஏற்ற வகையில், சுற்றுச்சூழல் சமூக நல வரி விதிக்கும் சட்டத்தைக் கொண்டு வருவதற்கான மசோதாவை சட்டசபையில் அமைச்சர் லோகேஷ் தமிழ்செல்வன் அறிமுகம் செய்தார்.

தமிழக சட்டசபையில் நேற்று வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் லோகேஷ் தமிழ்செல்வன், தமிழ்நாடு மதிப்பு கூட்டு வரிச் சட்டத் திருத்த மசோதா ஒன்றை அறிமுகம் செய்தார். அதில் கூறப்பட்டு இருப்பதாவது:–

மதுபான நுகர்வினாலும், அதிலிருந்து உருவாகும் கண்ணாடி மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளினாலும் ஏற்படும் மோசமான சுற்றுச்சூழல் மற்றும் சமூக பாதிப்புகள் குறித்து அரசு மிகுந்த கவலை கொண்டுள்ளது. மதுபானக் கொள்கலன்களை முறையாக அப்புறப்படுத்தாததும், போதிய அளவில் மறுசுழற்சி செய்யாததும், வனவிலங்குகள் மற்றும் பொது சுகாதாரத்திற்கு ஆபத்தை விளைவிக்கிறது. அதோடு, சூழலியல் சீரழிவிற்கும் பெரும் காரணமாக அமைகிறது.

அத்தகைய மோசமான பாதிப்புகளைக் குறைப்பதற்கு மாநில அரசுக்கு உள்ள கடமையை பல்வேறு கோர்ட்டுகளின் தீர்ப்புகள் வலியுறுத்தியுள்ளன. இந்த மோசமான சுற்றுச்சூழல் மற்றும் சமூக பாதிப்புகளைக் குறைப்பதற்கும், சுற்றுச்சூழலுக்கு உகந்த நிலையான நடைமுறைகளை ஊக்குவிப்பதற்கும், தகுந்த நிதி மற்றும் ஒழுங்குமுறை நடவடிக்கைகளை எடுப்பது அவசியம் என்றும் அரசு கருதுகிறது.

அதன்படி, மதுபான விற்பனையின் மீது 'சுற்றுச்சூழல் மற்றும் சமூக நலத் தீர்வை' என்ற தீர்வையை (வரி) விதிக்க அரசு முன்மொழிந்துள்ளது. இந்தத் தீர்வை மூலம் கிடைக்கும் நிதி வருவாய் சில நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும்.

அதன்படி, மதுபானக் கொள்கலன்களை முறையாக மறுசுழற்சி செய்து, பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்தி, மறுபயன்பாட்டுக்கு எளிதாக்க வேண்டும். மதுப் பழக்கத்திற்கு அடிமையானவர்களுக்கான மறுவாழ்வு மற்றும் மதுப் பழக்க மீட்புத் திட்டங்களும், மதுப் பழக்க அடிமைத்தனத்தால் பாதிக்கப்பட்ட நபர்களின் குடும்பங்களுக்கான நலத்திட்டங்கள் மற்றும் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட வேண்டும்.

மது அருந்துவதால் ஏற்படும் தீய விளைவுகள் மற்றும் மதுபான கொள்கலன்களை முறையாக அப்புறப்படுத்தாததால் ஏற்படும் மோசமான சுற்றுச்சூழல் அபாயங்களை எடுத்துரைக்கும் விழிப்புணர்வு மற்றும் கல்விப் பிரசாரங்களை மேற்கொள்ள வேண்டும். சூழலியல், காடுகள் மற்றும் வனவிலங்குகளைப் பாதுகாத்து மீட்டெடுக்க வேண்டும்.

இந்த நோக்கங்களுக்காக தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தை தகுந்தவாறு திருத்தம் செய்வதற்கு அரசு முடிவு செய்துள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இந்த மசோதா, சட்டசபையின் இறுதி நாள் கூட்டத்தில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படும்.

NAME CHANGE

I,OLD NAME : Anita M
DATE OF BIRTH : 20/08/1981
W/o : Mahendra Kumar
Native District : Jalore , Rajasthan
Address:55,Mulla Sahib Street Sowcarpet , Park Town, Chennai 600003
SHALL HENCEFORTH BE KNOWN AS
New Name - ANITA
OLD NAME : Anita M

NAME CHANGE

I,OLD NAME : BHARATHI
DATE OF BIRTH : 21/06/1974
W/o : BHARATH KUMAR
Native District : Jalore , Rajasthan
Address:55,Mulla Sahib Street Sowcarpet , Chennai 600001
SHALL HENCEFORTH BE KNOWN AS
New Name - BHARATHI KUMARI
OLD NAME : BHARATHI

பெயர் மாற்றம்

நான், சல்மான் ஷெரிப் R த/பெ. அப்துல் ரஹ்மான் ஷெரிப் பிறந்த தேதி: 10.02.1994 பிறந்த இடம்: திண்டுக்கல் வசிப்பிடம் பி1, வடக்கு சிப்பு தெரு, பிளாக் 9, நெய்வேலி - 607801, கடலூர் இனி முதற்கொண்டு சல்மான் ஷெரிப் அப்துல் ரஹ்மான் ஷெரிப் என்று அழைக்கப்படுவேன்.

சல்மான் ஷெரிப் R

பெயர் மாற்றம்

நான், JESSY DAINA. J த/பெ. ஜேம்ஸ் J பிறந்த தேதி: 07.08.2004 பிறந்த ஊர்: சென்னை வசிப்பிடம் எண்.182, 2வது தெரு, சுவாமி நகர், கோவில்பதாகை, ஆவடி, சென்னை - 600 062 இனி முதற்கொண்டு JESSY DAYANA. J என்று அழைக்கப்படுவேன்

JESSY DAINA. J

ENROLLMENT NOTICE

After 10 days of the publication of the notice and within Three months thereafter, I, Geetha. N, D/o. P.R. Narayanan, permanently residing at No.9, Padma Street, VGN Avenue, Phase - 2, Mugappair, Chennai - 600 037. Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamilnadu and Puducherry, Bar Council Buildings, High Court Campus, Chennai-104. Those who have any valid objections may notify the same to the Bar Council with in ten days.

GEETHA. N

9வது உதவி நீதிபதி
சிட்டி சிவில் கோர்ட்டு, சென்னை
E.P.No. 1383 of 2024
In
A.R.C.No. 251 of 2023

ஸ்ரீராம் சிட்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் ... மனுதாரர்

எதிர்

Mr. Madhu Shankar & Others ... எதிர்மனுதாரர்கள்

To
M. ChandraSekar,
36 Manickavelu,
Technician (T.R.S)-1.
The Senior Section Engineer,
Southern Railway, Arakkonam Railway Station, No 4 R.S.K Complex,
Goods Shed Road 1st Cross Lane,
Arakkonam. 631 001

—D4

தங்களிடம் ரூ.5,81,767.00/–ஐ வசூலிப்பதற்காக மேற்கண்ட E.P. மனு உங்கள் மீது தொடரப்பட்டுள்ளது. இம்மனு வருகிற 19.8.2026 தேதி காலை 10.30 மணிக்கு மேற்கண்ட நீதிபதி முன்னிலையில் தங்களின் வரவிற்காக ஒத்தி போடப்பட்டுள்ளது. அன்றைய தினம் நீங்கள் நேரிலோ அல்லது தங்களது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராக வேண்டும். தவறும் பட்சத்தில் உங்கள் மீது ஒருதலை பட்சமாக தீர்ப்பு வழங்கி உங்கள் சம்பளத்தில் ஒரு பகுதியை பிடிக்க உத்தரவு இடப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

M. Ramanathan.
மனுதாரர் வழக்கறிஞர்

மேன்மைமிகு திண்டிவனம் முதன்மை சார்பு நீதிமன்றம் அவர்கள் சமூகம்
O.S. No. 370/2025

பைசல் (எ) முகம்மது இப்ராஹிம்
த/பெ. முகம்மது அலி,
38ஏ, தைக்கால் தெரு,
கோட்டக்குப்பம்,
வானூர் வட்டம் ... வாதி

– எதிர்–

அப்ரின் (எ) குரைஷாபேகம்
க/பெ. பைசல் (எ) முகம்மது இப்ராஹிம்,
26, பெரிய தெரு, கோட்டக்குப்பம்,
வானூர் வட்டம்.
தற்காலம் : 8, முதல் மாடி,
9வது குறுக்கு தெரு, பரகத் நகர்,
கோட்டக்குப்பம், வானூர் வட்டம் ... பிரதிவாதி

மேற்படி நெம்பர் வாதி, பிரதிவாதி பேரில் கடந்த 07.02.2021ம் தேதியில் நடைபெற்ற திருமணத்தை செல்லாது என டிக்ளேர் செய்யக் கோரி அசல் தாவாவினை சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, மேற்படி வழக்கில் பிரதிவாதி ஆகிய தாங்கள் சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராக வருகின்ற 13.08.2026 அன்று வாய்தா வைக்கப்பட்டுள்ளது. அன்றைய தேதியில் காலை 10.00 மணியளவில் சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராகி தங்களுடைய ஆட்சேபனை தெரிவித்துக் கொள்ள வேண்டிய தவறும் பட்சத்தில் பிரதிவாதியாகிய தங்களுக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இந்த அறிவிப்பின் மூலம் தங்களுக்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

M.சுரேஷ்குமார் M.A., LLM.,
M.ரமேஷ் B.Sc., B.L.,
வழக்கறிஞர்கள், திண்டிவனம்

VASTU HOUSING FINANCE

வாஸ்து ஹவுசிங் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்
யூனிட் எண். – 203 & 204, 2வது தளம், ஏ விங், நவ்பாரத் எஸ்டேட்,
ஜக்காரியா பண்டர் மார்க் சாலை செவ்ரி (மேற்கு), மும்பை – 400 015, மகாராஷ்டிரா
CIN No.: U65922MH2005PLC272501

சுவாதீனம் எடுத்த அறிவிப்பு

வாஸ்து ஹவுசிங் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாகக் கீழே கையொப்பமிட்டுள்ளவர், நிதிச் சொத்துக்களைப் பத்திரமயமாக்கல் மற்றும் மறுசீரமைத்தல் மற்றும் கடன் ஈட்டுறுதி மீதான உரிமை அமலாக்கச் சட்டம், 2002—ன் கீழ் மற்றும் கடன் ஈட்டுறுதி (அமலாக்க) விதிகள் 2002—ன் விதி 3 உடன் இணைந்த பிரிவு 13 (12)—ன் கீழ் அவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்களுக்கு, அந்தந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை, அறிவிப்பு கிடைத்த 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு கோரி ஒரு டிமாண்ட் நோட்டீசை வெளியிட்டார். கடன்தாரர்கள் அந்தத் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியதால், கீழே கையொப்பமிட்டுள்ளவர், இச்சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் இவ்விதிகளின் விதி 8–ன் கீழ் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை, கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேதியில் சுவாதீனம் எடுத்துள்ளார். கடன்தாரர் மற்றும் உத்தரவாததாரருக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது என்னவென்றால், இந்தச் சொத்து தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள வேண்டாம் எனவும், இந்தச் சொத்து தொடர்பான எந்தவொரு நடவடிக்கையும் வாஸ்து ஹவுசிங் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் கிளைக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகை மற்றும் அதற்கான வட்டி, செலவுகள் போன்றவற்றிற்கான பொறுப்பிற்கு உட்பட்டிருக்கும்.

வ. எண்.	கடன்தாரர், உடன் கடன்தாரர் பெயர், கடன் கணக்கு எண்.	டிமாண்ட் நோட்டீஸ் தேதி & தொகை	சொத்து குறித்த விவரம்	சுவாதீன வகை & தேதி
1	இளங்கோவன் செல்வம் (கடன்தாரர்), சிவசங்கரி இ (உடன் கடன்தாரர்) LP0000000178702	18/மே/26 15/மே/26 அன்று ரூ.649465/–	திருப்பூர் பதிவு மாவட்டம், தாராபுரம் சார் பதிவாளர் எல்லை, தாராபுரம் வட்டம், தாராபுரம் நகர நகராட்சி வருவாய் வார்டு எண் 4, பிளாக் எண் 8, சித்ராவுத்தன் பாளையம் ஓடை வீதியில் உள்ள நகர சர்வே எண் (T.S.F.No.) 964/1–ல், ஆவண எண் 2574/2021 என்ற பாக விடுதலைப் பத்திரத்தின்படி ஒதுக்கப்பட்ட 22.5 சதுர மீட்டர் (242 சதுர அடி) அளவுள்ள மனை. இதன் மொத்தப் பரப்பளவு 22.5 சதுர மீட்டர் (242 சதுர அடி), தமிழ்நாடு 638656. எல்லைகள்: தெற்கு–வடக்கு பாதைக்கு வடக்கிலும், கிழக்கு–மேற்கு பாதைக்குத் தெற்கிலும், அமராவதி அவர்களின் சொத்துக்கு கிழக்கிலும், மாரம்மாள் அவர்களின் சொத்துக்கு மேற்கிலும் அமைந்துள்ளது.	03/08/2026 அடையாள சுவாதீனம்
2	குகன் கே (கடன்தாரர்), உமாமகேஸ்வரி கே (உடன் கடன்தாரர்), ஜெகன் கே (உடன் கடன்தாரர்), குமார் எஸ் (உடன் கடன்தாரர்) HL0000000163363	16/மே/26 12/மே/26 அன்று ரூ.1042071/–	தமிழ்நாடு 631603, காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், ஒழுகரை கிராமத்தில் அமைந்துள்ள 1119 சதுர அடி பரப்பளவு கொண்ட காலி நிலம் முழுமையும். இந்த நிலம் பட்டா எண். 101, பழைய சர்வே எண். 150/1 பகுதி, புதிய சர்வே எண். 304/1 ஆகியவற்றில் அடங்கியுள்ளதுடன், இது செங்கல்பட்டு பதிவு மாவட்டம் மற்றும் உத்திரமேரூர் சார்–பதிவாளர் எல்லைக்குட்பட்டது. இதன் எல்லைகள் முறையே: வடக்கு: குப்பனுக்குச் சொந்தமான சொத்து, தெற்கு: சகாதேவனுக்குச் சொந்தமான சொத்து, கிழக்கு: சிமெண்ட் சாலை, மேற்கு: ராஜேந்திரனுக்குச் சொந்தமான சொத்து.	05/08/2026 அடையாள சுவாதீனம்
3	சி சத்தியமூர்த்தி (கடன்தாரர்), ஆனந்தி சத்தியமூர்த்தி (உடன் கடன்தாரர்) HL0000000143412	16/மே/26 12/மே/26 அன்று ரூ.2037606/–	நாமக்கல் பதிவு மாவட்டம், எருமைப்பட்டி சார் பதிவாளர் எல்லை, புதுக்கோட்டை கிராமம், கதவு எண் 17/23b, கோடீஸ்வரன் நகர், சர்வே எண் (S.F.No.) 233/1, பட்டா எண் 639–ல் உள்ள புஞ்சை 3.05 ஏக்கரில், 0.09 ½ சென்ட் போக மீதமுள்ள 2.95 ½ சென்ட் நிலப்பரப்பு வீட்டு மனைகளாகப் பிரிக்கப்பட்டு "கோடீஸ்வரன் நகர்" எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதில், கிழக்கு–மேற்காக இருபுறமும் 37 அடியும், வடக்கு–தெற்காக இருபுறமும் 40 அடியும், ஆக மொத்தம் 1480 சதுர அடி (137.50 சதுர மீட்டர்) அளவுள்ள வீட்டு மனை எண் 11, நாமக்கல் மாவட்டம், தமிழ்நாடு, 637013. இதில் கட்டப்பட்டுள்ள 791.25 சதுர அடி அளவுள்ள ஆர்.சி.சி (RCC) கான்கிரீட் தளமிட்ட வீடு மற்றும் அதன் கதவு, கதவு நிலைகள், ஜன்னல், ஜன்னல் நிலைகள், முற்றம், கொல்லைப்புறம், உள் அறைகள் உள்ளிட்டவைகளுடன், கதவு எண் 17/23B, மின்சார இணைப்பு எண் 04–205–006–610, குழாய் இணைப்புகள், மின் இணைப்புகள் (வயரிங்) மற்றும் அதன் முன்வைப்புத் தொகை (டெபாசிட்) ஆகியவற்றுடன் அமைந்துள்ளது. எல்லைகள்: மேற்கண்ட சர்வே எண்ணில் உள்ள கிழக்கு–மேற்கு, வடக்கு–தெற்கு 23 அடி அகலப் பாதைக்கு வடக்கிலும், கிணற்றுக்குத் தெற்கிலும், வீட்டு மனை எண் 12–க்கு கிழக்கிலும், காலஞ்சென்ற முத்தையன் அவர்களின் நிலத்திற்கு மேற்கிலும் அமைந்துள்ளது.	05/08/2026 அடையாள சுவாதீனம்

தேதி : 08.08.2026
இடம் : திருப்பூர், காஞ்சிபுரம், நாமக்கல்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
வாஸ்து ஹவுசிங் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்

isarc

இந்தியா எஸ்எம்இ அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்
பதிவு அலுவலகம்: தி ரூபி, 11வது தளம், வட மேற்குப் பிரிவு,
மனை எண் 29, சேனாபதி பாபட் மார்க், தாதர் (மேற்கு), மும்பை – 400028.

சுவாதீனம் அறிவிப்பு [சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 2002–ன் விதி 8(2)]

வ எண்	கடன் கணக்கு எண்./ கடன்தாரர்/ உடன் கடன்தாரர் பெயர்	கோரிக்கை அறிவிப்பு தேதி	சுவாதீன தேதி / சுவாதீன வகை	கோரிக்கை அறிவிப்பில் தேதியில் நிலுவைத் தொகை	அடமானச் சொத்தின் விவரம்
1	FEDPORSTL 0482837 ஸ்ரீ துர்கை கிராபிக்ஸ், கனிமொழி எஸ் & துளசிங்கம் கே	08.05.2026	06.08.2026	ரூ. 16,44,958.25/-	[illegible]

தேதி : 08.08.2026 | இடம் : பாண்டிச்சேரி

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, இந்தியா எஸ்எம்இ அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்

murugappa **CUMI**

கார்போரண்டம் யுனிவர்சல் லிமிடெட்

CIN : L29224TN1954PLC000318
பதிவு அலுவலகம்: 'டேர் ஹவுஸ்', எண். 234, N S C போஸ் சாலை பாரீஸ் சென்னை – 600 001.
Tel: +91-44-30006161
Email : investorservices@cumi.murugappa.com; Website : www.cumi-murugappa.com

ஜூன் 30, 2026 அன்று முடிவடைந்த காலாண்டுக்கான தேர்ந்தெடுக்கப்பட்ட தணிக்கை செய்யப்படாத ஒட்டுமொத்த நிதிநிலை முடிவுகள்

(ரூ. லட்சத்தில்)

வ.எண்	விவரங்கள்	முடிவடைந்த காலாண்டு தணிக்கை செய்யப்படாதது 30.06.2026	முடிவடைந்த ஆண்டு தணிக்கை செய்யப்பட்டது 31.03.2026	முடிவடைந்த காலாண்டு தணிக்கை செய்யப்படாதது 30.06.2025
1	செயல்பாடுகளின் மூலம் மொத்த வருமானம்	142663	520631	121902
2	முதலீட்டாளர்கள், அசாதாரண இனங்கள், கட்டுப்பாடற்ற வட்டி, வருமானவரி ஆகியன சமவிகிதப்பங்கு கணக்கில் கொண்டு வருவதற்கு முந்தைய காலத்திற்கான நிகராலாபம்.	10849	38503	7760
3	முதலீட்டாளர்கள், அசாதாரண இனங்கள், கட்டுப்பாடற்ற வட்டி வருமானவரி ஆகியன சமவிகிதப்பங்கு கணக்கில் கொண்டு வருவதற்கு பிந்தைய காலத்திற்கான நிகராலாபம்.	7640	19473	6189
4	இக்காலத்திற்கான மொத்த விரிவான வருமானத்திற்கு பின் கட்டுப்பாடற்ற பாத்தியதை (இக்காலத்திற்கான வருமானம் உள்ளடக்கிய லாபம் (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்)	9756	43407	15696
5	சமபங்கு மூலதனம்	1905	1905	1904
6	ரிசர்வுகள் மறுமதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக	387840 (31 மார்ச் 2026 அன்றுள்ளபடி)		
7	பங்கு விகித ஈட்டுத்தொகை (ரூ.1/- ஒரு பங்கிற்கு)- ஆண்டு விகிதம் செய்யப்படவில்லை அ) அடிப்படை	4.04	10.30	3.28
	ஆ) குறைமதிப்பு	4.04	10.30	3.27

குறிப்பு:

1. மேற்குறிப்பிடப்பட்டவைகள் 2015-ம் வருடாந்திய SEBI (பட்டியலிடுதல் கடமைகள் மற்றும் அறிவித்தல் தேவைகள்) விதிமுறைகளில் 33-வது விதிமுறையின் கீழ், பங்கு வர்த்தக நிறுவனத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டிற்கான நிதிநிலை முடிவுகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட விவரங்கள் ஆகும். காலாண்டிற்கான நிதிநிலை முடிவுகளின் முழு படிவமும் நிறுவனத்தின் www.cumi-murugappa.com மற்றும் பங்கு வர்த்தக நிறுவனத்தின் www.bseindia.com மற்றும் www.nseindia.com இணையதளங்களிலும் காணலாம். கொடுக்கப்பட்டுள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் நிதி முடிவுகளை அணுகலாம்.
2. மேற்காணும் முடிவுகள் ஆகஸ்ட் 07, 2026 அன்று நடைபெற்ற தணிக்கைக் குழு கூட்டத்தில் சீராய்வு செய்யப்பட்டு, அன்று நடைபெற்ற இயக்குனர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதலளிக்கப்பட்டன. மேலும் அந்த முடிவுகள் கம்பெனியின் சட்டபூர்வ தணிக்கையாளர்களால் குறிப்பிட்ட வரம்பிற்கு சீராய்விற்கு உட்படுத்தப்பட்டன.
3. விதிவிலக்கான பொருட்கள் பின்வருவனவற்றைக் குறிக்கின்றன:

(ரூ. லட்சத்தில்)

விவரங்கள்	முடிவடைந்த காலாண்டு தணிக்கை செய்யப்படாதது 30.06.2026	முடிவடைந்த ஆண்டு தணிக்கை செய்யப்பட்டது 31.03.2026	முடிவடைந்த காலாண்டு தணிக்கை செய்யப்படாதது 30.06.2025
ஹோல்டிங் நிறுவனத்தின் ஒரு படிநிலை துணை நிறுவனமான CUMI AWUKO Abrasives GmbH (CAAG)-இன் செயல்பாடுகளை முடிவுக்குக் கொண்டுவரும் முடிவு தொடர்பாக, பல்வேறு சொத்துக்களின் மதிப்பிறக்கம் மற்றும் மறுசீரமைப்புச் செலவுகளை அங்கீகரித்தல் (கீழே உள்ள குறிப்பு 3ஆ-ஐப் பார்க்கவும்)	-	(11,856)	-
ஹோல்டிங் நிறுவனத்தின் ஒரு படிநிலை துணை நிறுவனமான Foskor Zirconia (Pty) Ltd (FZL)-இன் பல்வேறு சொத்துக்களின் மதிப்புக் குறைப்பு (கீழே உள்ள குறிப்பு 3இ-ஐப் பார்க்கவும்)	-	(1,601)	-
மொத்தம்	-	**(13,457)**	-

3அ புவிசார் அரசியல் சூழ்நிலை காரணமாக , CUMI இன்டர்நேஷனல் லிமிடெட் மூலம் நடத்தப்படும் ரஷ்யாவின் Volzhsky Abrasive Works (VAW), துணை நிறுவனத்தின் செயல்பாடுகளுக்கு ஒரு நிச்சயமற்ற சூழலை தொடர்ந்து வழங்கி வருகிறது. இதில் சர்வதேச தடைகள் மற்றும் பிரதேச தடைகளிலிருந்து எழும் நிறுவனங்களும் அடங்கும். ஜனவரி 10, 2025 தேதியிட்ட அமெரிக்க வெளியுறவுத் துறையின் செய்திக்குறிப்பின்படி, VAW உட்பட உற்பத்தித் துறையில் உள்ள ரஷ்ய நிறுவனங்களின் தொகுப்பு, ரஷ்ய கூட்டமைப்பு பொருளாதாரத்தின் உற்பத்தித் துறையில் செயல்படுவதற்கோ அல்லது செயல்படுவதற்கோ அமெரிக்க கருவூலத் துறையின் வெளிநாட்டு சொத்து கட்டுப்பாட்டு அலுவலகத்தின் (OFAC) சிறப்பு நியமிக்கப்பட்ட தேசியவாதிகள் மற்றும் தடுக்கப்பட்ட நபர்கள் பட்டியலில் (SDN பட்டியல்) சேர்க்கப்பட்டது. VAW இன் பெயரிடலின் விளைவாக, அமெரிக்காவில் உள்ள அல்லது அமெரிக்க நபர்களின் உடைமை அல்லது கட்டுப்பாட்டில் உள்ள சொத்துக்களில் VAW இன் அனைத்து சொத்து மற்றும் நலன்களும் தடுக்கப்படுகின்றன. மேலும், அமெரிக்க நாணயம் மற்றும் அமெரிக்க நபர்களை உள்ளடக்கிய பெரும்பாலான நிதி பரிவர்த்தனைகள் OFAC ஆல் வழங்கப்பட்ட பொதுவான அல்லது குறிப்பிட்ட உரிமத்தால் அங்கீகரிக்கப்படாவிட்டால் அல்லது விலக்கு அளிக்கப்படாவிட்டால் VAW க்கு சாத்தியமில்லை.

மேற்கூறிய பெயரிடலின் விளைவாக, நிறுவனம் (CUMI) VAW இன் பணப்புழக்க நிலையை விரிவாக மதிப்பீடு செய்துள்ளது, இதில் அதன் தொடர்ச்சியான நிறுவனமாகத் தொடரும் திறன், நிறுவனத்தின் மீதான கட்டுப்பாடு ஆகியவை அடங்கும். மேலும், CUMI இன்டர்நேஷனல் லிமிடெட்டின் ஒருங்கிணைந்த மட்டத்தில் தொடர்புடைய நல்லெண்ணம் உட்பட, இருப்புநிலைக் குறிப்பு தேதியில் சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள், அருவ சொத்துக்கள், வர்த்தக வரவுகள், சரக்கு மற்றும் பிற சொத்துக்களை உள்ளடக்கிய அதன் சொத்துக்களின் மீள்பெறும் தன்மை மற்றும் சுமந்து செல்லும் மதிப்புகளையும் விரிவாக மதிப்பிட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டின் அடிப்படையில், முந்தைய ஆண்டில் நிதி முடிவுகளில் விதிவிலக்கான உருப்படி என்ற தலைப்பின் கீழ் ரூ.10,413 லட்ச மதிப்பிலான குறைபாடுச் செலவு (VAW ஆல் தீர்வு நிறுவனங்களுடன் வெளிநாட்டு நாணயத்தில் வைத்திருக்கும் சில நிலுவைகளையும், குழுவிற்கு வெளியே VAW இன் ஏற்றுமதி வரவுகளையும் குறிக்கிறது) அங்கீகரிக்கப்பட்டது. தற்போதைய காலத்திற்கு கூடுதல் குறைபாடு எதுவும் தேவையில்லை என்று கருதப்பட்டது.

நிலவரப்படி ரூ. 36,090 லட்ச மதிப்புள்ள VAW-க்கு சமமான ரொக்கம் மற்றும் ரொக்கப் பொருட்கள் தற்காலிக திருப்பி அனுப்பும் கட்டுப்பாடுகள் காரணமாக குழுவிற்குள் உள்ள பிற நிறுவனங்களால் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளன. தாக்க மதிப்பீடு ஒரு தொடர்ச்சியான செயல்முறையாகும், மேலும் தொடர்புடைய நிச்சயமற்ற தன்மைகளின் வளர்ந்து வரும் தன்மையைக் கருத்தில் கொண்டு, நிறுவனம் உள் மற்றும் வெளிப்புற சூழலில் ஏற்படும் அனைத்து குறிப்பிடத்தக்க மாற்றங்களையும் தொடர்ந்து கண்காணிக்கும்.

3ஆ. மார்ச் 30, 2026 அன்று, ஜெர்மனியில் உள்ள ஒரு படிநிலை துணை நிறுவனமான CUMI AWUKO Abrasives GmbH (CAAG)-இன் ஹோல்டிங் நிறுவனமான, சைப்ரஸில் உள்ள CUMI இன்டர்நேஷனல் லிமிடெட் (CIL)-இன் இயக்குநர்கள் குழு, ஜெர்மனியில் பொருந்தக்கூடிய சட்டங்களுக்கு இணங்க, ஒரு தன்னார்வ கலைப்பு செயல்முறையின் மூலம் CAAG-ஐ மூடுவதைத் தொடங்குவதற்கு ஒப்புதல் அளித்தது. அதிகரித்து வரும் இழப்புகள் மற்றும் நிலவும் சந்தை நிலவரங்களைக் கருத்தில் கொண்டு ஒரு திருப்புமுனையை அடைய இயலாமை ஆகியவற்றால் வகைப்படுத்தப்படும் CAAG-இன் தொடர்ச்சியான குறைந்த செயல்திறனைக் கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டது. CAAG, குழுமத்தின் ஒரு முக்கிய துணை நிறுவனம் அல்ல, அதன்படி, அதன் கலைப்பு குழுமத்தின் ஒட்டுமொத்த வணிகச் செயல்பாடுகளில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படவில்லை.

இந்த முடிவைத் தொடர்ந்து, CAAG-இன் நிதித் தகவல்கள், வசூலிக்கக்கூடிய மதிப்பு (தொடர்ந்து இயங்காத நிறுவனம்) அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்தச் சூழலில், குழுமம், செயல்பாடுகளைக் கலைப்பது தொடர்பாக சொத்துக்களின் ஏட்டு மதிப்பு மற்றும் பொறுப்புகளின் அங்கீகாரம் ஆகியவற்றின் விரிவான மதிப்பீட்டை மேற்கொண்டு, ரூ. 11,856 லட்சம் செலவினத்தை அங்கீகரித்துள்ளது. ஒருங்கிணைந்த நிதி முடிவுகளில் உள்ள விதிவிலக்கான இனங்கள் என்ற தலைப்பின் கீழ், பல்வேறு சொத்துக்களின் மதிப்புக்குறைப்பு மற்றும் மறுசீரமைப்புச் செலவுகளை அங்கீகரித்தல் ஆகியவை அடங்கும்.

3இ மே 13, 2026 அன்று, தென் ஆப்பிரிக்காவில் உள்ள ஒரு படிநிலை துணை நிறுவனமான Foskor Zirconia (Pty) Ltd, தென் ஆப்பிரிக்கா (FZL) இன் இயக்குநர்கள் குழு, FZL இன் நிதி நிலையை மதிப்பாய்வு செய்து, அதன் செயல்பாடுகளைத் தொடர இயலாத நிலையில் இருப்பதாகவும், வேறு மாற்று வழி எதுவும் இல்லை என்றும் முடிவு செய்தது. தற்போதைய சந்தை நிலவரங்களின் பின்னணியில், நீடித்த இழப்புகள் மற்றும் சாத்தியமான மீட்சி இல்லாததன் மூலம் வெளிப்படும் FZL இன் தொடர்ச்சியான குறைந்த செயல்திறனின் அடிப்படையில் இந்த மதிப்பீடு செய்யப்பட்டது.

இந்த முடிவைத் தொடர்ந்து, FZL இன் நிதித் தகவல்கள், விற்பனை மதிப்பு (தொடர்ந்து இயங்காத நிறுவனம்) அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்தச் சூழலில், குழுமம் சொத்துக்களின் ஏட்டு மதிப்பின் விரிவான மதிப்பீட்டை மேற்கொண்டு, ஒருங்கிணைந்த நிதி முடிவுகளில், 'அசாதாரண இனங்கள்' என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,601 லட்சம் மதிப்பிலான தேய்மானச் செலவை அங்கீகரித்துள்ளது. இது பல்வேறு சொத்துக்களின் மதிப்புக் குறைப்பைக் குறிக்கிறது. நடப்பு காலத்திற்கு கூடுதலான எந்த ஒதுக்கீடும் அங்கீகரிக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

4 30 ஜூன் 2026 அன்று முடிவடைந்த காலாண்டிற்கான தொகையில், நிறுவனத்தின் துணை நிறுவனமான ஸ்டெர்லிங் அப்ரேசிவ்ஸ் லிமிடெட் நிறுவனத்தால் அசையா சொத்தின் குத்தகை உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய கட்டிடத்தின் உரிமைகள் மாற்றம் செய்யப்பட்டதன் விளைவாக கிடைத்த ரூ. 2,518 லட்சம் இலாபம் அடங்கியுள்ளது.

5. தனிப்பட்ட தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் தொகைகளின் விவரங்கள்.

(ரூ. லட்சத்தில்)

விவரங்கள்	முடிவடைந்த காலாண்டு தணிக்கை செய்யப்படாதது 30.06.2026	முடிவடைந்த ஆண்டு தணிக்கை செய்யப்பட்டது 31.03.2026	முடிவடைந்த காலாண்டு தணிக்கை செய்யப்படாதது 30.06.2025
செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம்	85501	306254	70679
வரிக்கு முன் லாபம்	11455	52482	16645
வரிக்கு பின் லாபம்	8784	41628	14497
மொத்த விரிவான வருமானம்	8784	41085	14584

6. மேற்படி காலாண்டில் ஊழியர்களுக்கான விருப்ப வாய்ப்பு பங்கு திட்டத்தில் 1,000 சமவிகித பங்குகளை கம்பெனி வழங்கியுள்ளது.
7. மார்ச் 31, 2026 இல் முடிவடைந்த காலாண்டுகளின் புள்ளிவிவரங்கள், முடிவடைந்த முழு நிதி ஆண்டின் தணிக்கை செய்யப்பட்ட தொகைகள் முடிவடைந்த மூன்றாவது காலாண்டு டிசம்பர் 31, 2025 வரையிலான வெளியீட்டு ஆண்டின் தொகைகளுக்கிடையே ஆன சரிப்பாட்டு தொகைகள் ஆகும்.

சென்னை
ஆகஸ்ட் 07, 2026

கார்போரண்டம் யுனிவர்சல் லிமிடெட்டிற்காக
எம் எம் முருகப்பன்
சேர்மன்

கலசலிங்கம் பொறியியல் கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் வெள்ளி விழா சந்திப்பு

ஸ்ரீவில்லிபுத்தூர், ஆக.8–

கிருஷ்ணன்கோவில் கலசலிங்கம் பொறியியல் கல்லூரியின் 1997–2001 பேட்ச் முன்னாள் மாணவர்களின் வெள்ளி விழா சந்திப்பு, ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள கலசலிங்கம் பல்கலையில் துணைத்தலைவர் எஸ். சசிஆனந்த் தலைமையில் நடைபெற்றது.

அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான் உட்பட பல நாடுகளிலிருந்தும் 165 முன்னாள் மாணவர்கள் தங்கள் குடும்பத்துடன் வருகை தந்து பழைய நினைவுகளைப் பகிர்ந்து கொண்டனர். பரிசோதனைக்கூடம், வகுப்பறை, கேன்டீன்களுக்குச் சென்று ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களிடம் கலந்துரையாடி மகிழ்ச்சியைப் பரிமாறிக் கொண்டனர்.

துணைவேந்தர் எஸ். நாராயணன், பதிவாளர் வி. வாசுதேவன், மூத்த பேராசிரியர்கள் மற்றும் முனைவர்கள் சரவணசங்கர், தேவராஜ், ஸ்ரீகுமார் ஆகியோர் கலந்துகொண்டு நினைவுப்பரிசுகளை வழங்கினர்.

முன்னாள் மாணவர்கள் சார்பில் மூன்று மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகையை ராஜேஷ் பிரபு, அனிதா, வேல்முருகன், அனுராதா ஆகியோர் இணைந்து வழங்கினர்.

ஏகேசிஇகேஎல்யூ முன்னாள் மாணவர் சங்க தலைவர் முருகேஸ்வரி, துணைத்தலைவர் தனலட்சுமி மற்றும் பத்ரிநாத், கைலாசம், பாலமுருகன் ஆகியோர் முன்னாள் மாணவர்கள் சஞ்சீவ்குமார், விஜய் ஆகியோருடன் இணைந்து விழாவைச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

மணப்பாறை அரசு மருத்துவமனையை மேம்படுத்த வேண்டும்: அமைச்சர் அருண்ராஜிடம் எம்எல்ஏ கதிரவன் நேரில் வலியுறுத்தல்

திருச்சி, ஆக.8–

மணப்பாறை சட்டமன்ற உறுப்பினர் ரா.கதிரவன், மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அருண்ராஜை நேரில் சந்தித்து, மணப்பாறை சட்டமன்றத் தொகுதியின் முக்கிய மருத்துவத் தேவைகள் குறித்து விரிவாகக் கோரிக்கை மனு வழங்கினார்.

மணப்பாறை காமராஜர் அரசு மகப்பேறு மருத்துவமனையில் நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப போதிய படுக்கை வசதி இல்லாததால் பொதுமக்கள் பெரும் சிரமத்தை எதிர்கொள்வதாக அவர் சுட்டிக்காட்டினார். மேலும், தற்போது இயங்கி வரும் மருத்துவமனை கட்டிடத்தின் மீது மேலும் இரண்டு தளங்கள் அமைத்து படுக்கை வசதிகளை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தினார்.

அதைத் தொடர்ந்து, வையம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்தி, அப்பகுதி மக்களுக்குத் தரமான மருத்துவ சேவைகள் கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமெனவும் கோரிக்கை வைத்தார். அத்துடன், மேற்கண்ட கோரிக்கைகள் தொடர்பாக அமைச்சர் அவர்கள் மணப்பாறை மற்றும் வையம்பட்டி பகுதிகளுக்கு நேரில் வந்து ஆய்வு மேற்கொள்ளவும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

மனுவில் உள்ள கோரிக்கைகளைக் கவனமாக கேட்டறிந்த அமைச்சர், "நேரில் ஆய்வு மேற்கொண்டு, தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்" என்று உறுதியளித்தார்.

போடி அணைக்கரைப்பட்டி ஊராட்சி பொதுமக்களுக்கு வரி செலுத்த வேண்டுகோள்

கம்பம், ஆக. 7–

